**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 141/2022**

| | | DEPOSITION OF WITNESS | PW.2 |
|---|---|---|---|
| NAME | ராமமூர்த்தி | TALUK | |
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 21.01.2026.

**வாதி தரப்பில் முதல் விசாரணை :-**

நான் இந்த வழக்கில் 3ஆம் நபர். எனது தரப்பு சாட்சியாக பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன், அதில் உள்ள விவரங்கள் தெரியும். படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். எனது தரப்பு பிரமாண வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**1ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1. என்ன வழக்கு என்று தெரியுமா என்றால் சி.ஆர்.சரவணனின் வாரிசு என அபிநயா கேட்கிறார். நான் 12ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். தமிழ் எழுத, படிக்க தெரியும். ரூபி, அபிநயா மற்றும் சரவணனை தெரியுமா என்றால் தெரியும் சரவணனோடு ஒன்றாக போக்குவரத்து கழகத்தில் வேலை பார்த்தேன். சரவணன் இறப்பிற்கு போய்வந்தேனா என்றால் போய் வந்தேன்.

2. சரவணனின் தகப்பனார் பெயர் இறப்பு சான்றிதழில் ராமதாஸ் என உள்ளது என்றால் சரிதான். இறப்பு சான்றிதழில் மனைவி பெயர் பூங்கொடி என உள்ளது என்றால் சரிதான், பூங்கொடியுடன் திருமணமாகி ஒரு வாரத்தில் டைவர்ஸ் ஆகி ஐந்து லட்சம் பணம் கட்டிவிட்டு வந்ததாக சொன்னார். பிரமாண வாக்குமூலத்தில் சரவணன் கமலாபுரத்தில் தங்கியதாகவும் செதுக்கரையில் தங்கியுள்ளதாகவும் சொல்லியுள்ளதற்கு ஆதரவாக ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. சரவணம் பற்றி எதுவும் தெரியாது என்றாலும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2 மற்றும் 3வது பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து சம்மன் வரவில்லை என்றால் சரிதான். சி.ஆர்.சரவணன் அவர்களை எப்படி தெரியும் என்றால் பேர்ணாம்பட்டு பணிமனையில் நானும் அவரும் ஒரே பேருந்தில் ஓட்டுநர்களாக பணிபுரிந்தோம். அவர் எந்த விலாசத்தில் குடியிருந்தார் என்றால் குடியாத்தம் சுண்ணாம்புபேட்டையில் வசித்து வந்தார். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை யார் சொன்னது என்றால் நான் சொல்லி டைப் செய்தது.

2. சரவணனின் மனைவி யார் என்றால் அவர் ரூபியை காதலித்து திருமணம் செய்துகொண்டார். ரூபி மற்றும் சரவணன் ஒரே இனத்தை சேர்ந்தவர்களா என்றால் வெவ்வேறு இனத்தை சேர்ந்தவர்கள், அதனால் அவர்கள் வீட்டில் அவர்களை சேர்த்துக்கொள்ளவில்லை. ரூபி மற்றும் சரவணன் எங்கு வசித்து வந்தார்கள் என்றால் கமலாபுரம் சிந்தகணவாயில் வசித்து வந்தார்கள்.

3. சரவணன் மற்றும் ரூபிக்கு குழந்தைகள் உள்ளதா என்றால் அபிநயா என ஒரு பெண் குழந்தை உள்ளது. சரவணனின் அப்பா அம்மா பெயர் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றாலும் இறந்துபோன சரவணன் எனது நண்பர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முதல் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தவறானவை என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH

Digitally signed by K KARTHICK ASATH

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.